Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC.258/2020 PW-1**

Name : கோவிந்தராஜ்
Father / Husband name : ஏழுமலை
Village :
Age :
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 15.11.2024

**Accused 1 and 2 Present.**

**முதல் விசாரணை**

நான் தற்போது வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையத்தில் தனிப்பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருக்கிறேன். கடந்த 11.05.2019 ம் தேதி நான் தலைமைக்காவலராக பணியாற்றியபோது உதவி ஆய்வாளர் சசிக்குமார் அவர்களின் உத்தரவின்பேரில் காலை 8 மணி முதல் 1 நாள் பணிநிமித்தமாக திண்டிவனம் அரசு மருத்துவமனை புறக்காவல் நிலையத்தில் பாதுகாப்பு பணியிலிருந்தேன். அன்றையதினம் மாலை சுமார் 06.45 மணியளவில் திண்டிவனம் மருத்துவமனை ஓபியில் விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்திலிருந்து தகவல் சொல்லிக்கொண்டிருந்தபோது அவசர சிகிச்சை பிரிவு நுழைவு வாயிலிருந்த ஒருவர் என்னிடம் வந்து அவசர சிகிச்சைப்பிரிவில் சண்டைப்போட்டுக்கொள்கிறார் வந்து என்னை பாருங்கள் என்று சொன்னார். நான் உடனே அவசர சிகிச்சைப்பிரிவுக்கு வந்து பார்த்தபோது TN 01 M 3211 பதிவு எண் கொண்ட சாமிஅன்கோ என்ற தனியார் ஆம்புலன்ஸில் விமலா என்ற நபரை மருத்துவ அதிகாரி சுதாகர் அவர்களின் பரிந்துரைப்படி மேல்சிகிச்சைக்காக சென்னை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்செல்ல அனுமதி சீட்டு பெற்று ஏற்றிக்கொண்டிருந்தார்கள். அப்போது வெளியிலிருந்து வந்த இந்தியன் ஆம்புலன்ஸ் டிரைவர் நகராஜ் ஆம்புலன்ஸ் ஓனர் வெங்கடேசன் ஆகியோர் சாமிஅன்கோ ஆம்புலன்ஸ் டிரைவரை அசிங்கமாக பேசி அவரிடம் சண்டை போட்டார்கள். நான் அப்போது முழுசீருடையில் இருந்தேன். நான் நாகராஜ் மற்றும் வெங்கடேசனிடம் என்ன பிரச்சனை என்று கேட்டேன். அப்போது நாகராஜ் நீங்கள் போலிஸ் தானே அந்த தனியார் ஆம்புலன்சிற்கு ஆர்சிபுக், பர்மிட் உள்ளதா என்று தணிக்கை

செய்யுமாறு சொன்னார். அதற்கு நான் மேற்படி ஆவணங்களை தணிக்கை செய்வதற்கு இது நேரமில்லை என்றும், விபத்தில் அடிப்பட்ட விமலா உயிருக்கு போராடிக்கொண்டு மோசமான நிலையில் இருப்பதால் முதலில் ஆம்புலன்ஸ் செல்ல வழிவிடு என்று சொன்னேன். அதற்கு நாகராஜ் இந்த போலிஸ்காரா நாய்களே இப்படி தான் என்று சொல்வீர்கள் என்று முழுசீருடையிலிருந்த என்னை அசிங்கமாக பேசினார். நான் உடனே எனது கைப்பேசியில் சம்பவத்தை பதிவு செய்தேன். அதற்கு அவருடன் இருந்து வெங்கடேசன் நீ என்னடா பதிவு செய்வது நான் பதிவு செய்து என்று சொல்லி முழுசீருடையில் இருந்த என்னை அசிங்கமாக பேசி பணிசெய்யவிடாமல் தடுத்து கையால் நெட்டி கீழே தள்ளினார்கள். நாகராஜ் அந்த சமயம் குடிபோதையில் இருந்தார். இரண்டு பேரும் டியூட்டி முடித்துவிட்டு நீ வெளியில் தான் வரவேண்டும் என்று உனது யூனிபார்மை கழட்டி வேலையில்லாமல் செய்துவிடுவோம் என்று மிரட்டினார்கள். அதன்பின்னர் நான் ரோசனை காவல் நிலையத்திற்கு தொலைபேசியில் தகவல் கொடுத்துவிட்டு மறுநாள் பணி முடிந்தவுடன் காவல் நிலையம் சென்று எழுத்துப்பூர்வமாக எதிரிகள் மீது புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணமான புகார் மனு என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான், அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **வாதியின் கையொப்பத்துடன் கூடிய அசல் புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் கூறிய நாகராஜ் மற்றும் வெங்கடேசன் இன்று ஆஜரிலிருக்கும் எதிரிகள் தான். நான் கொடுத்த புகார் சம்மந்தமாக ரோசனை காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.